1990 சனவரி 19]

திரு. வெ. கோவிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு நகரைச் சுற்றியுள்ள பெரும்பாலான கிராமங்கள் காலனி வீடுகளைக் கொண்டது. குறிப்பாக ஆதி திராவிட மாணவர்கள் எட்டாவது வகுப்பு வரை படித்துவிட்டு, மேற்கொண்டு படிக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அதைப் போக்க பேரணாம்பட்டில் உள்ள அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக அரசு உயர்த்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் விடுவித்த கேள்வி முறையானதுதான். ஆனால் கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகள் எல்லாம் சிறப்பிழந்து இருக்கிற ஒரு சூழ்நிலையின் காரணமாக, அந்தப் பள்ளிகள் எல்லாம் பழுது பார்க்கவேண்டிய நிலைமையில் இருப்பதை முன்னிட்டு, பள்ளிகளை எல்லாம் ரிப்பேர் செய்துவிட்டு, மீண்டும் பள்ளிகளை ஆரம்பிக்கவும் அவற்றின் நிலைகளை மேல்நிலைப் படுத்தவும் அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. வெ. கோவிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டில் ஆதி திராவிட மாணவர் விடுதி வாடகைக் கட்டிடத்தில் உள்ளது. அதற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கட்டிடங்களையும் அரசினர் விடுதிகளாகக் கட்டவேண்டும் என்றுதான் அரசு நினைக்கிறது. ஆனால் நிதிநிலை சரியில்லாத சூழ்நிலையின் காரணமாக இந்த அரசினுடைய பரிசீலனையில் அது இல்லை. இந்த ஆண்டு குறிப்பாக 25 புதிய விடுதிகளைக் கட்ட ஆரம்பித்திருக்கிறோம். கூடியமட்டிலும் புதிய விடுதிகளை ஆரம்பிக்க அரசு முனைகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகிரியில் தாலுகா அரசு மருத்துவமனை.

* 575. திரு. ஆர். ஈஸ்வரன் :
மாண்புமிகு மக்கள்நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சிவகிரியில் தாலுகா அரசு மருத்துவமனை ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் சிவகிரியில் தாலுகா அந்தஸ்துள்ள மருத்துவமனை நிறுவ செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

10.15 மணி [1990 சனவரி 19

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகிரி ஒரு தாலுக்காவாக இருக்கிறது. சுமார் 30,000 ஜனத்தொகை உள்ள இடம். அருகாமையில் 10, 15 கிராமத்து மக்கள் அந்தத் தாலூக்காவிற்கு வரக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே சிவகிரியில் தாலுக்கா அரசு மருத்துவமனை வருவதற்காக நான் ஏற்கெனவே அமைச்சர் அவர்களுக்கு மனுச்செய்திருக்கிறேன். அந்தத்தாலுக்கா மருத்துவமனையில் அனைத்து மருத்துவப் பிரிவுகளும் இருக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து மனுச் செய்திருக்கிறேன். ஆனால் அமைச்சரவர்கள் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லையென்று சொல்கிறார்கள். ஆகவே வருகிற நிதியாண்டிலாவது சிவகிரி தாலுக்காவில் ஒரு அரசு மருத்துவ மனையை அனைத்து மருத்துவப் பிரிவுகளையும் கொண்டதாக ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு நிதிநிலை யைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கும் என தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மிக்க நன்றி.

(விடை—இல்லை.)

இராசபாளையம் நகருக்குக் குடிநீர் வசதி.

* 3114. திரு. வி. பி. இராசன் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராசபாளையம் நகரில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் எடுக்கப் பட்ட நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது நிறைவு பெறும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ). ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 57 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகிக்க வகை செய்யப்பட்ட ஒரு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஆய்வில் உள்ளது. ஆய்வு முடிந்த பின் செயலாக்கத்திற்கு எடுக்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி திட்டத்தின் உத்தேச மதிப்பீடுகள் இறுதியாக்குதல் மார்ச் 1990-ல் முடிவடையும்.